முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 29.10.2025.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
அசல் வழக்கு எண். 1/2025

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நடராஜன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | முனுசாமி | வயது | : | 62 |
| ஊர் | : | செய்யாறு | தொழில் | : | விவசாயம் |

வா.சா. 1 (நடராஜன்): வாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணை:

நான் எந்த வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக படிக்க வரும் என்றால் சரிதான். நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தை பொது வழியாகவும் களமாகவும் பயன்படுத்துவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஒரு சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும் என்றால் சொத்தின் உரிமையாளரோ அல்லது அவர் இறந்துவிட்டால் அவரது வாரிசுகளை வைத்தோ வழக்கை தாக்கல் செய்யமுடியும் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட 28.07.1994 தேதியிட்ட கிரயப்பத்திரம் ஆவணத்தை நான் உட்பட 12 நபர்கள் சேர்ந்து கிரயம் பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் 12 நபர்களில் 4 நபர்கள் மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். மீதி நபர்கள் இறந்துவிட்டார்கள்.

2. மீதி நபர்கள் இறந்துவிட்டார்கள் என்றும் அவர்கள் அனைவருக்கும் வாரிசுதாரர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் சில நபர்களுக்கு வாரிசுதாரர்கள் உள்ளார்கள். சில நபர்களுக்கு வாரிசுதாரர்கள் இல்லை. எந்த நபர்களுக்கு வாரிசுதாரர்கள் உண்டு, இல்லை என்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். எந்த நபர்களுக்கு வாரிசுதாரர்கள் உள்ளார்கள் என்றால் சின்னவேலு என்பவர் வாரிசு உள்ளது. அவருக்கு 4 வாரிசுகள் உள்ளனர். அவர்களின் பெயர்கள் என்னவென்றால் அவரின் ஒரு வாரிசு பெயர் தேவராஜ் ஆகும். மீதி 3 வாரிசுகள் பெயர்களில் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிரயப்பத்திரத்தில் உள்ள பெயர்கள் எம். கன்னியப்பன், ருத்ரப்பமுதலியார், வரதப்பிள்ளை, கிருஷ்ணா நாயுடு, மாசிலாமணி, பாலசுந்தரம், கன்னியப்பன் ஆகிய எந்த நபர்களுக்கு

வாரிசுதாரர்கள் உண்டு, இல்லை என்றால் கிருஷ்ணா நாயுடு மற்றும் கன்னியப்பனுக்கு வாரிசுகள் இல்லை.

3. ஒரு வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கு சொத்திற்கு சம்மந்தமான உரிய நபர்களை தரப்பினர்களாக சேர்த்து தாக்கல் செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சம்மந்தப்பட்ட நபர்கள் நாங்கள் நால்வரும் வழக்கை தாக்கல் செய்துள்ளோம். 12 நபர்களால் கிரயம் செய்யப்பட்டுள்ள நிலையில் நாங்கள் நால்வர் மட்டும் வழக்கு சொத்தானது எங்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று கோரி நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி தவறாக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சில நபர்கள் ஒத்துழைக்கவில்லை அதனால் அவர்கள் சேர்க்கப்படவில்லை. எங்களைத்தவிர மற்ற கிரயம் பெற்ற நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காதது தவறு என்று சொன்னால் நாங்கள் 1994ல் ஊர் நலனுக்காக வழக்கு சொத்தை கிரயம் பெற்று அனைவரும் அதை அனுபவிக்கவேண்டும் என்று வாங்கினோம். அவர்களில் சிலர் இறந்துவிட்டபடியால் அவர்களின் வாரிசுதாரர்கள் வழக்கை தாக்கல் செய்ய ஒத்துழைப்பு அளிக்கவில்லை.

4. எங்களைத்தவிர மற்ற நபர்களை தரப்பினர்களாக வழக்கில் சேர்க்காததால் வழக்கு சொத்தானது பிரதிவாதிகளுக்கு உரிமையானது என்ற விவரம் தெரியவரும் என்பதால் அவர்களை சேர்க்கவில்லை என்று சொன்னால் நாங்கள் எங்களுக்காக வழக்கை தாக்கல் செய்யவில்லை பொது நலனுக்காகத்தான் வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வழக்கு சொத்தானது பிரதிவாதிகளுக்கு உரிய சொத்து என்றும் அவர்கள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னாலும் வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு வழக்கு சொத்தில் உரிமை உண்டு.

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2025.10.29 16:15:29 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு